Register No. | | | | | | | | |

**FA8A** **5764–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Five - years Regular Course)

Fourth Year – Eighth Semester

INTERPRETATION OF STATUTES

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The words shall be given the natural, plain and grammatical meaning" – Discuss.

   "சொற்களுக்கு இயல்பான மற்றும் இலக்கண மரபு குன்றாமல் பொருள் கொளல் வேண்டும்" - விவரிக்க.

2. Explain about the general rules of construction mentioned in the General Clauses Act, 1897.

   பொது வகையங்கள் சட்டம், 1897-ல் குறிப்பிடப்படும் பொருள் விளக்கத்தின் பொது விதிகள் குறித்து எழுதுக.

3. Elucidate the statement "Beneficial Construction is a tendency rather than a rule".

   "பயன்மிகு பொருள் கொள்முறை, ஒரு விதி என்பதை விட ஒரு போக்கு எனலாம்" என்ற உரையை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the rule of Ejusdem generis.

   இனம்கொளல் விதி பற்றி விளக்குக.

5. State the differences between a "Consolidating statute" and a "Codifying statute".

   "தொகுப்பு சட்டத்திற்கும்" "இணைப்புச் சட்டத்திற்கும்" உள்ள வேறுபாடுகளைக் கூறுக.

6. Explain with reference to decided cases the "mischief rule" of construction.

"கேடு அகற்றல் விதி" மூலம் பொருள் விளக்கம் காண்பதை முடிவுற்ற வழக்குகளுடன் விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Generalia specialibus non-derogant

தனி விதிக்கிசைந்தே பொதுவான விதி இயங்கும்

(b) Logical interpretation

தருக்க முறை பொருள் விளக்கம்

(c) Golden rule

பொன் விதி

(d) Enabling statutes

வழிவகை செய்யும் சட்டங்கள்

(e) Casus Omissus

விடுபட்ட விபரம்

(f) Declaratory Statutes

விளம்புகைச் சட்டங்கள்

(g) Doctrine of pith and substance

மையக் கருப்பொருள் கோட்பாடு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Given cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X', a victim of sexual violence, argues before the court to expand the definition of the offence as enumerated under the General Clauses Act, 1897, so as to include the prohibited act of sexual violence. 'X' for this purpose relies upon the phraseology "unless there is anything repugnant in the subject or context" as found under Section 3 of the General Clauses Act, 1897. Discuss the validity of X's argument.

பாலியல் வன்முறைக்கு ஆட்படுத்தப்பட்ட 'X' என்பவர் பொது வகையச் சட்டத்தின் 1897ல் வகைமுறைப்படுத்தப்பட்டுள்ள குற்றங்கள் என்ற வரையறைக்கு விரிவாக்கம் அளித்து பாலியல் வன்முறை என்பது தடை செய்யப்பட்ட செயலாக சேர்க்க வேண்டும் என்று நீதி மன்றத்தில் வாதாடுகின்றார். 'X' என்பவர் இதற்கு வலுவளிப்பதற்காக பகுதி பிரிவு 3 "பொருளுக்கு அல்லது சூழலுக்கு ஒவ்வாததாக எதுவும் இருந்தாலன்றி... " என்ற சொல் நடையை சார்ந்திருக்கின்றார். இதில் 'X' என்பவரின் விவாதத்தின் தகுதி நிலை பற்றி விவாதிக்க.



9. On the charges of corruption, after departmental enquiry a government servant was first of all dismissed from service. Later, on the same grounds, a criminal prosecution was initiated against him. Discuss the validity of this second proceedings.

ஒரு அரசு ஊழியர் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் துறை நடவடிக்கையின் கீழ் முதலில் பணி நீக்கம் செய்யப்பட்டார். பின்னர் அதே காரணத்திற்காக அவர் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டது. இவ்விரண்டாவது நடவடிக்கையின் செல்லும் தன்மையை ஆராய்க.

10. The request of 'A', who is under preventive detention, to make his representation before the advisory board on preventive detention by a legal practitioner of his choice was rejected. 'A' contends that it is violative of his fundamental rights. Decide.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 'அ' என்பவர் தடுப்புக் காவல் ஆலோசனை குழுமம் முன்பு தான் விரும்பும் வழக்குரைஞரால் தனது முறையீட்டுரையினை சமர்ப்பிக்க கோருகிறார். அவரது கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது. அச்செயல்முறை தனது அடிப்படை உரிமைக்கு எதிரானதென வாதாடுகிறார். முடிவு காண்க.